# கரூர் நகராட்சி
# கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**2020**ம் ஆண்டு ஜீலை **31**ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை **4.25**மணிக்கு கரூர் நகராட்சியின் மன்ற சாதாரணக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திருமதி.கே.எம்.சுதா, பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எட்., அவர்கள் தலைமையில் மன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

**1)**கரூர் நகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணிக்காக நகராட்சி அலுவலக வளாகம், பிரிவு அலுவலகங்களில் கால்கள் மூலம் இயக்கப்படும் கை கழுவும் இயந்திரம் (Hand Washer with Foot Switch) **5**எண்ணம் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்**.**

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ள நகராட்சி அலுவலக வளாகம், பிரிவு அலுவலகங்களுக்கு கால்கள் மூலம் இயக்கப்படும் கை கழுவும் இயந்திரம் (Hand Washer with Foot Switch) கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.**3336**/ஜே**2/2020–8** நாள்.**02.04.2020**ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது**.** அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி Sun Flex Ads, Theni நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் வகையில் கால்கள் மூலம் இயக்கப்படும் கை கழுவும் இயந்திரம் (Hand Washer with Foot Switch) **5**எண்ணிக்கை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கால்கள் மூலம் இயக்கப்படும் கை கழுவும் இயந்திரம் (Hand Washer with Foot Switch) **5**எண்ணிக்கை கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.**2,71,320/–**யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது**.**

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்**.** **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.**2289** அனுமதிக்கப்பட்டது**.** பதிவு செய்யப்பட்டது**.**

**2)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.**5437**/J1/2020-10, நாள்.**09.04.2020** தேதியிட்ட கடிதத்தில் தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் அனைத்து பணியாளர்களுக்கும் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **48** வார்டுகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பல்ஸ் பரிசோதனை செய்யும் கருவி **12** எண்ணிக்கை வாங்கி வழங்க கோரி சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்**.**

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை பணி மேற்கொள்ளும் அனைத்து பணியாளர்களுக்கும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த பல்ஸ் பரிசோதனை செய்யும் கருவி **9** பிரிவுகளுக்கு **9** எண்ணிக்கை, கலவை உரக்கிடங்கு **1** எண்ணிக்கை மற்றும் அலுவலகத்திற்கு **2** எண்ணிக்கை ஆக மொத்தம் **12** கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் தேவையான

அனைத்து உபகரணங்கள் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020—8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி **Lifecare Theni** நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணி மேற்கொள்ளும் அனைத்து பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்வதற்கு பல்ஸ் பரிசோதனை செய்யும் கருவி 12 எண்ணம் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய காலஅவகாசம் இல்லாத காரணத்தினாலும் கொரனோ வைரஸ் பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேவையான பல்ஸ் பரிசோதனை செய்யும் கருவி 12 எண்ணம் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.29,998/—யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2290 பதிவு செய்யப்பட்டது.

3)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 06.03.2020ம் தேதி ஆய்வுக் கூட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் அனைத்து பணியாளர்களுக்கு கீழ்கண்டவாறு கை கழுவும் திரவம் வாங்கி வழங்க சுகாதார ஆய்வாளர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

| வ.எண் | பொருளின் விவரம் | அளவு | தேவையான எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | Hand Wash (ECO) | 225ml | 1000 Nos., |
| 2 | Hand Wash (ECO) | 5 Litres | 655 Nos., |
| 3 | Hand Wash Sanitizer Gel | 225ml | 1000 Nos., |
| 4 | Hand Wash Sanitizer Gel | 5 Litrs | 15 Nos., |

எனவே, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து பணியாளர்களுக்கு மேற்கண்டவாறு கை கழுவும் திரவம் கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.3336/ஜே2/2020—8 நாள்.02.04.2020ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி Pupa Ceramics, Karur நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியில் ஈடுபடும் அனைத்து பணியாளர்களுக்கு தேவையான கை கழுவும் திரவம் (Hand Wash (ECO) and Hand Wash Sanitizer Gel) கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும் மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Pupa Ceramics, Karur என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கி கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகை ரூ.7,34,382/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2291 பதிவு செய்யப்பட்டது.

4)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதி வார்டு.43 முதல் 48 வரையுள்ள பகுதிகளின் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் உள்ள மின்மோட்டார் மற்றும் பேனல் போர்டுகள் அதிக மின்னழுத்தம் காரணமாக ஏற்படும் பழுதுகள் மற்றும் இதர பழுதுகளை

சரிசெய்ய இப்பணிகளை ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3188/2020)

தீர்மான எண்.2292 அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதி வார்டு.37 முதல் 42 வரையுள்ள பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் அதிக மின்னழுத்தம் காரணமாக ஏற்படும் பழுதுகள் நீக்கம் செய்ய போதிய பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லை. எனவே ஒப்பந்தமுறையில் இப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3187/2020)

தீர்மான எண்.2293 அனுமதிக்கப்பட்டது.

6)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியில் வார்டு எண்.42 ஜல்லிவாடாநாயக்கனூர் ஆதிதிராவிடர் காலனி மற்றும் வார்டு.47 புது வசந்தம் நகர், வார்டு.48 ஏ.சி.பி., கார்டன் பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணற்றில் அமைக்கப்பட்ட சின்டெக்ஸ் டேங்க் சிமெண்ட் மேடை உடைந்து பழுது ஏற்பட்டுள்ளதை பழுதுநீக்கம் செய்து புதிதாக 1000 லிட்டர் கொள்ளளவு மற்றும் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் மாற்றி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.15இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.15இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3184/2020)

தீர்மான எண்.2294 அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதி வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகள் மூலம் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சின்டெக்ஸ் டேங்க், பிளாம்பாரம் மேடை ஆகியவற்றில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யவும், புதிதாக சின்டெக்ஸ் டேங்க் மாற்றவும் மேடை அமைக்கவும் மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3186/2020)

தீர்மான எண்.2295 அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் நகராட்சிக்குட்பட்ட தாந்தோணி பகுதியில் வார்டு.33 முதல் 48 வரையுள்ள பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கட்டளை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று (கட்டளை) நிலைய மற்றும் மூலக்காட்டானூர் நீருந்து நிலையம் காந்திகிராமம் தரைமட்ட நீர்த் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில்

பழுதுகள் மற்றும் பேனல் போர்டு பழுதுகள் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.70இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.70இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3189/2020)

தீர்மான எண்.2296 அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் நகராட்சிக்குட்பட்ட கரூர் பகுதியில் உள்ள அம்மா உணவகங்களில் உள்ள இரண்டு கிரைண்டர்கள் பழுதடைந்துள்ளது. எனவே இரண்டு அம்மா உணவகங்களுக்கு புதிதாக இரண்டு கிரைண்டர்கள் வாங்கி வழங்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் உணவகத்தில் உள்ள பாய்லர்கள் நீராவி குழாய்களை மாற்றியமைத்தல், Refregerater-1 மற்றும் தேவையான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00இலட்சத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(இ3/3224/2020)

தீர்மான எண்.2297 அனுமதிக்கப்பட்டது.

10)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 14 வரையுள்ள இனாம்கரூர் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு வாங்கல் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 120எச்.பி., மின்திறனுள்ள மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இதில் Unit-I மோட்டாருக்கான Stainless Steel Shaft உடைந்துவிட்டதால் நீரேற்றம் செய்ய இயலாமல் உள்ளது. எனவே, உடைப்பட்டுள்ள Shaft உடனடியாக மாற்ற வேண்டியது அவசியமாகிறது. மேலும் 20எச்.பி., மின்மோட்டார் மற்றும் பைப்புகளை மாற்றி அமைக்கவும், பேனல் போர்டு பழுதுகளைச் சீர்செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேலும் ஆற்றில் நீரோட்டம் குறைந்துள்ளதால் உறிஞ்சு கிணற்றிக்கு அருகில் நீர் வரும் வகையில் நீர்வழிபாதை அமைக்க வேண்டியதாக உள்ளது. மேற்கண்ட பணிகள் குடிநீர் விநியோக பணியின் அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டியதாக உள்ளதால் இப்பணிகள் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.70இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.70இலட்சத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3223/2020)

தீர்மான எண்.2298 அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவுக்கு சொந்தமான இயந்திரம் ROBOT இயந்திர வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வாகன இயந்திர தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற SURYA BALA EARTH MOVERS சேலம் நிறுவனத்திடமிருந்து 20.06.2020 அன்று நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பணியினை செய்து முடிக்கவும் அதற்கான செலவினத் தொகை ரூ.1,74,313/—யை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மேற்படி வாகனத்தின் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் முன்அனுமதியுடன் SURYA BALA EARTH MOVERS சேலம் நிறுவனத்தில் நேரடியாக பெறப்பட்ட விலைப்புள்ளியினை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடிக்கவும் இதற்கான வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு செலவினத் தொகை ரூ.1,74,313/— நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்ச வரம்புக்கு மேல் செலவினமாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2558/2020)

தீர்மான எண்.2299 அனுமதிக்கப்பட்டது.

12)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவுக்கு சொந்தமான ஈப்பு வாகன எண். TN 47 AG 6364 1,70,000 கி.மீ., துாரத்திற்கான பட்டியல் அட்டவணை சர்வீஸ் பணிகள் செய்து முடிக்க COVID-19 வைரஸ் பரவுதல் தடுக்கும் பணியில் ஈடுபடும் வாகனத்தின் அவசர அவசியம் கொண்டு ஊரடங்கு உத்திரவு அமலில் உள்ள காரணத்தால் நகராட்சி சட்ட விதி 15ன்கீழ் SHIVA AUTOMOBILES (P) LTD., KARUR நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.8,944/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)COVID-19 வைரஸ் பரவுதல் தடுக்கும் பணியில் ஈடுபடும் இவ்வாகனத்தின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பிரிவு 15ன்கீழ் பணி மேற்கொண்டதையும் பட்டியல் தொகை குடிநீர் விநியோக நிதியில் வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்புக்கு மேல் உள்ள கூடுதல் செலவின தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2061/2019)

தீர்மான எண்.2300 பதிவு செய்யப்பட்டது.

13)நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் கடித ந.க.எண்.3624/2019/திம2, நாள்.06.06.2020 தேதியிட்ட கடிதத்தில் மாண்புமிகு.துணை முதலமைச்சர், சட்டப்பேரவை அறிவிப்பின்படி மாவட்டவாரியான நகர் ஊரமைத்துறையின் சார்நிலை அலுவலகங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதினை தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் நகர் ஊரமைப்பு அலுவலகம் தொடங்கிட கரூர் நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் 1500 முதல் 2000 சதுரடி பரப்பளவு கொண்ட கட்டிடம் ஒதுக்கீடு செய்துதருமாறும் கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இவ்வலுவலக கடித ந.க.எண்.2451/2020/எப்.1, நாள்.02.07.2020—ல் கரூர் நகராட்சி இனாம் கரூர் வரிவசூல் மையத்தில் முதல் தளத்தில் பொதுப்பணித்துறையின் அலகின்படி நிர்ணயம் செய்யும் வாடகைத்தொகையினை செலுத்த சம்மதிக்கும்பட்சத்தில் நகர்மன்ற ஒப்புதல் பெற்று அலுவலக கட்டிடம் வாடகை அடிப்படையில் தற்காலிகமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருச்சி அவர்களின் 06.07.2020—ம் தேதிய கடிதத்தில் மேற்படி ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடத்திற்கு அரசு நிர்ணயம் செய்யப்படும் வாடகையை வழங்க சம்மதத்தினை தெரிவிக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கரூர் நகராட்சி, இனாம் கரூர் வரிவசூல் மையத்தில் முதல்தள கட்டிடத்தினை பொதுப்பணித்துறையின் அலகின்படி நிர்ணயம் செய்யும் வாடகை அடிப்படையில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு:—</u> மன்றம் அனுமதிக்கலாம். (2451/2020/எப்1)

தீர்மான எண்.2301 அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN 47 AH 8781 க்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய கொரோனா தொற்று பணிகள் மேற்கொள்ள வாகன அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களின் 08.07.2020 அன்று அனுமதி பெற்று EICHER நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலரிடமிருந்து விலைப்புள்ளி பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கும்

மேற்படி கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண்.TN 47 AH 8781 க்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய EICHER நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் JAI LAXMI AUTO WORKS & AGENCIES (P) LTD., KARUR ரூ.32,850/—க்கு மதிப்பீடு

பட்டியல் வழங்கியுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி ரூ.32,850/—யை வருவாய் பொதுநிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN 47 AH 8781 க்கு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய EICHER நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் JAI LAXMI AUTO WORKS & AGENCIES (P) LTD., KARUR வரப்பெற்ற மதிப்பீடு பட்டியல் ரூ.32,850/— ஏற்று வேலை உத்திரவு வழங்கவும். வருவாய் பொதுநிதியில் பட்டியல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி வாகனத்தில் ஹைட்ராலிக் JACK யில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்ந் விலைப்புள்ளி பெற்று முடிக்கவும், இதற்கான செலவினத் தொகை ரூ.15,000/—யை செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)கொரோனா தொற்று பணிகள் முன்னிட்டும் இவ்வாகனத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4)அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/1859/2020)

தீர்மான எண்.2302 அனுமதிக்கப்பட்டது.

15)கரூர் நகராட்சியில் 2018—2019ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் கரூர் நகராட்சி லட்சுமிராம் தியேட்டர் பின்புறம் முதல் காமதேனு நகர் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தொழில்நுட்ப வடிவமைப்பின்படி (Design and Structural safety) ல் வடிகாலின் பக்கவாட்டு சுவர் செங்குத்தாக (RCC Vertical side wall) அமைக்க தொழில்நுட்ப வடிவமைப்பு (Design and Structural safety) வழங்குமாறு முதல்வர் IRTT கல்லூரி, ஈரோடு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி வடிகாலின் பக்கவாட்டு சுவர் செங்குத்தாக (RCC Vertical side wall) அமைக்க தொழில்நுட்ப வடிவமைப்பு (Design and Structural safety) வழங்கியதற்கான கட்டணம் ரூ.11,800/—யை முதல்வர், IRTT கல்லூரி, ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகைக்கு ரூ.11,800/—யை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/9140/2019)

தீர்மான எண்.2303 அனுமதிக்கப்பட்டது.

16)கரூர் நகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி திட்டம் 2018—2019ன்கீழ் ரூ.18.00கோடி மதிப்பீட்டில் கரூர் இரயில் நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.7 வரை இணைக்கும் அம்மா சாலை பணியில் Retaining wall அமைக்கும் பணியின் உயரம் 3.50மீட்டருக்கு அதிகமாக உள்ளதால் Retaining wall அமைப்பதற்கு உரிய Technical Structural Design வழங்கக் கோரி முதல்வர் IRTT கல்லூரி, ஈரோடு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி மேற்படி இடத்தில் Retaining wall அமைப்பதற்கு உரிய Technical Structural Design வடிவமைத்து வழங்கப்பட்டதற்கான கட்டணம் ரூ.11,800/—யை முதல்வர், சாலை மற்றும் போக்குவரத்து தொழில்நுட்ப கல்லூரி (IRTT), ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகைக்கு ரூ.11,800/—யை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/7170/2017)

தீர்மான எண்.2304 அனுமதிக்கப்பட்டது.

**17)**கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் TN 47 AL 3569 **28.11.2019** தேதி பகல் சுமார் **12.00**மணிக்கு திரு.சாகுல் ஹமீது என்பவர் மீது ஓட்டுநர் திரு.நாராயணசாமி என்பவர் மோதி விபத்து ஏற்படுத்தி அவ்வழக்கு கரூர் நகர காவல் நிலையத்தில் குற்ற எண்.**783/2019**ன்படி பதிவு செய்யப்பட்டு கரூர் இயக்கவூர்த்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயத்தில் M.C.OP.No.54/2020 ன்படி வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்கிற்கு இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.நகுல்சாமி அவர்கள் ஆஜராகியுள்ளார்கள்.

எனவே, இவ்வழக்கிற்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.**10,000/**—யை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
நகராட்சி வழக்கறிஞர் திரு.நகுல்சாமி அவர்கள் இவ்வழக்கினை ஏற்று நடத்திடவும், அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(சி3/1225/2020)**

தீர்மான எண்.**2305** அனுமதிக்கப்பட்டது.

**18)**கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் திரு.ஏ.ரவிச்சந்திரன் மின் பணியாளர் நிலை—**1** மற்றும் திரு.பி.தமிழரசன் மின்கம்பி உதவியாளராகப் பணியாற்றி தற்போது **06.06.2019**ல் பணியிடை காலமானார் ஆகிய இருவரும் ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் ஈரோடு கிளையிடம் கடன் பெற்று திரும்ப செலுத்தாததால் கரூர் மாவட்ட முதன்மை சார்வு நீதிமன்றத்தில் வழக்கு எண்.Arb.No.145/2012, E.P.No.240/2019 ன்படி திரு.ஏ.ரவிச்சந்திரன் அவர்களையும், ஆணையாளர் கரூர் நகராட்சி அவர்களையும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு வழக்கிற்கும் ஆணையாளர், கரூர் நகராட்சி அவர்கள் சார்பாக இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.ஏ.முகமது யூசுப் அவர்கள் ஆஜராகவும், இவ்வழக்கிற்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.**10,000/**—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
இவ்வழக்கிற்கு ஏற்படும் செலவின தொகையினை பொதுநிதியிலிருந்து செலவிட அனுமதிக்கலாம்.
**(சி3/100/2020)**

தீர்மான எண்.**2306** அனுமதிக்கப்பட்டது.

**19)**கரூர் நகராட்சி இனாம் கரூர் பகுதி வார்டு எண்.**12** வாங்கப்பாளையம் முதல் அருகம்பாளையம் தெற்கு பகுதி வரை IUDM திட்டத்தில் மழைநீர் வடிகால் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இனாம் கரூர் பகுதிக்கான பிரதான குடிநீர் ஏற்றும் குழாய் வடிகால் அமைக்கும் பகுதியில் வருகிறது. இந்த பிரதான நீரேற்றும் குழாயினை **200** மீ நீளத்திற்கு புதிதாக அமைக்க வேண்டியது அவசியமாகிறது. குடிநீர் பணியின் அவசியம் கருதி பிரதான குடிநீர் ஏற்றம் செய்யும் குழாயினை புதிதாக அமைக்கும் பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.**14.50**இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**14.50** லட்சத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ2/3028/2020)**

தீர்மான எண்.**2307** அனுமதிக்கப்பட்டது.

**20)**கரூர் நகராட்சி வார்டு எண்.**3** இனாம் கரூர் பகுதிக்குட்பட்ட டான்சி மேல்நிலை தொட்டிக்கு அமராவதி ஆற்றில் இருந்து எல்.ஜீ.பி நகர் வழியாக **5** பி.வி.சி குழாய் பதிக்கப்பட்டு நீரேற்றம் செய்யப்படுகிறது. தற்போது ஆண்டாங் கோவில் ஊராட்சி மூலம் அப்பகுதியில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறத. பி.வி.சி குழாய்கள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. குடிநீர் பணியின் அவசியம் கருதி பழுதடைந்த **5** பி.வி.சி குழாய்களை

புதிதாக மாற்றி அமைக்க வேண்டியுள்ளதால் அதற்காகத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு கட்டணம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.1.50 லட்சத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ2/3030/2020)

தீர்மான எண்.2308 அனுமதிக்கப்பட்டது.

21)கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியாளர் நிலை–II பணியிடம் 1987ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு ஆணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன், கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகரமாகும். பல்வேறு தொழிற்சாலைகள் அமைந்துள்ள இந்நகரம் 53.26 ச.கி மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. இந்நகருக்கு தினசரி வெளியூரிலிருந்து வியாபார நிமித்தம் ஒரு லட்சத்திற்கு மேல் பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும் வளர்ந்து வரும் இந்நகராட்சிக்கு அடிப்படை வசதி மற்றும் அபிவிருத்தித் திட்டப் பணிகள், குடிநீர் திட்டப் பணிகள், பாதாள சாக்கடைப் பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், போக்குவரத்து மேலாண்மை திட்டப் பணிகள் ஆகிய பணிகளை கண்காணிக்கும் பொருட்டு நகராட்சிப் பொறியாளர் நிலை–II பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2014 முதல் 30.9.2020 வரை நீடித்து வைத்துக் கொள்ளக் கோரும் கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி நகராட்சிப் பொறியாளர் நிலை– II பணியிடம் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2020 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2365/2007)

தீர்மான எண்.2309 அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்காக தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி தெரு விளக்குகள் பராமரிப்பு பணிக்காக தோற்றுவிக்கப்பட்ட மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் 33 வருடங்கள் தொடர்ந்து இருந்து வருகிறது. அரசு ஆணை எண்.19, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை நாள். 14.01.2011–ன்படி கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய நகரமாகும் என்பதால், மேற்படி வார்டுகளில் தெருவிளக்கு அதிக அளவில் பராமரிக்க வேண்டியுள்ளதாலும், ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2020 வரை நீடித்து வைத்துக் கொள்ள கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி ஒரு மினி ஏணி லாரி ஓட்டுநர் பணியிடம் அவசியம் தேவை என்பதால், மேலும் 01.10.2020 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2366/2007)

தீர்மான எண்.2310 அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்காக 10 (பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள் 01.10.2013 முதல் 30.09.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 6568/2009/எப்3, நாள்.03.12.2013–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள–10(பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள்

| வ.எண். | பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மின்பணியாளர் நிலை– I | 3 |
| 2. | மின் பணியாளர் நிலை– II | 3 |
| 3. | குழாய் ஆய்வர் | 1 |
| 4. | குழாய் பொருத்துனர் நிலை–I | 1 |
| 5. | குழாய் பொருத்துனர் நிலை–II | 2 |
| | மொத்தம் | 10 |

மேற்படி பணியிடங்கள் 30 ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி, இனாம்கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல் செயல்பட்டு வருவதுடன் கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடங்கிய பெருநகரமாகும். தற்போது குடிநீர் விநியோகப் பணிக்காக ஆறு தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீரை நகருக்கு விநியோகம் செய்யவும், புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கவும், மேற்படி 10 (பத்து) தொழில்நுட்பப் பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2020 முடிய நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி மேற்படி பத்து தொழில்நுட்ப பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால் மேலும் 01.10.2020 முதல் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2367/2007)

தீர்மான எண்.2311 அனுமதிக்கப்பட்டது.

24) கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள தொழில்நுட்பமில்லாத 16 (பதினாறு) பணியிடங்களை 01.10.2013 முதல் 30.9.2014 முடிய நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6568/2009/எப்3 நாள்.03.12.2013ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

கரூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கீழ்க்கண்டுள்ள தொழில்நுட்பமில்லாத 16 (பதினாறு) பணியிடங்கள் குடிநீர் விநியோகம் மற்றும் விஸ்தரிப்புத் திட்டத்தினை செயல்படுத்த பணியிடங்களான

| வ.எண். | பணியிடங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ரிசர்வயர் காவலர் | 3 |
| 2. | தலைமை நீரேற்று நிலைய கிளீனர் | 3 |
| 3. | தலைமை நீரேற்று நிலைய காவலர் | 2 |
| 4. | பி.எப்.கிளீனர் | 5 |
| 5. | மறை திறப்பாளர் | 3 |
| | மொத்தம் | 16 |

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சியில் தொடர்ந்து இருந்து வருகிறது. தற்போது கரூர் நகராட்சியுடன் தாந்தோணி நகராட்சி ,இனாம் கரூர் நகராட்சி மற்றும் சணப்பிரட்டி ஊராட்சியை இணைத்து எல்லை விரிவாக்கம் செய்து ஒருங்கிணைந்த நகராட்சியாக 25.10.2011 முதல்

செயல்பட்டு வருவதுடன், கரூர் நகராட்சி 48 வார்டுகளை உள்ளடக்கிய பெருநகரமாகும். குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் விஸ்தரிப்பு திட்டத்திற்கு மேற்படி பணியிடங்கள் தொடர்ந்து அவசியம் தேவைப்படுவதால், 01.10.2014 முதல் 30.9.2020 முடிய நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்கள் மீது அனுமதியை எதிர்நோக்கி இந்நகராட்சிக்கு தொழில்நுட்பமில்லாத–16 (பதினாறு) பணியிடங்கள் அவசியம் தேவை என்பதால், மேலும் 01.10.2020 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (இ4/2368/2007)

தீர்மான எண்.2312 அனுமதிக்கப்பட்டது.

25)கரூர் நகராட்சியில் 2019–2020ம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித்தொகை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித்தொகையை உரியவர்களின் கணக்கு தலைப்பில் ஆன்–லைன் மூலம் பதிவேற்றம் செய்ய பதிவு செய்யப்பட்ட சான்றினை வருமான வரி அலுவலகத்தில் சமர்ப்பிக்க ஆன்–லைன் மூலம் பதிவு செய்ய மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நிறுவனம் GST ASSOCIATES என்ற நிறுவனத்திற்கு பதிவு கட்டணம் செலுத்த உத்தேச செலவினம் ரூ.8860/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். (சி5/3600/2020)

தீர்மான எண்.2313 அனுமதிக்கப்பட்டது.

26)கரூர் நகராட்சி வார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் வால்வுகளில் ஏற்படும் நீர்கசிவுகள் மற்றும் பழுதுகளை சரிசெய்வதற்குப் போதுமான பணியாளர்கள் நகராட்சியில் இல்லை என்பதால் இப்பணிகளை ஒப்பந்த முறையில் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.10.00இலட்சத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ2/3190/2020)

தீர்மான எண்.2314 அனுமதிக்கப்பட்டது.

27)கரூர் நகராட்சி வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள சணப்பிரட்டி பகுதிகளில் உள்ள பகிர்மானக் குழாய்களில் வால்வுகளில் உள்ள பழுதுகள் மற்றும் பிரதான நீரேற்றும் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. நகராட்சியில் இப்பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாமையால் ஒப்பந்த முறையில் இப்பணியினை மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1500இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.5.00இலட்சத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ2/3183/2020)

தீர்மான எண்.2315 அனுமதிக்கப்பட்டது.

28)இந்நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதிகளில் அமைந்துள்ள வாங்கப்பாளையம் மற்றும் வெங்கமேடு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் வார்டு எண்.8, 9, 11, 14 குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து Zonatation முறையில் சீரான குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்ள ஆறு இடங்களில் வால்வுகள் பொருத்தவும், தேவையான இடங்களில் Delinking செய்யவும், தேவைப்படும் இடங்களில் குடிநீர்

குழாய் விஸ்தரிப்பு செய்யவும், அதற்கான பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.70இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் செலவுத் தொகை ரூ.5.00இலட்சத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ2/3182/2020)

தீர்மான எண்.2316 அனுமதிக்கப்பட்டது.

29)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.33 முதல் 36 வரையுள்ள பகுதிகளுக்கு காவிரி ஆற்றின் கரையில் கட்டளை என்னுமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு வருகிறது. சணப்பிரட்டி பஞ்சாயத்தாக இருந்தபோது நிறுவப்பட்ட மின்மோட்டார் (20எச்.பி., திறன்) 2004 ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. தொடர் இயக்கத்தின் காரணமாக மின்மோட்டாரில் நீர் வெளியேற்றும் திறன் குறைந்து சணப்பிரட்டி– முல்லை நகரில் உள்ள தரைமட்டத் தொட்டிக்கு நீர் வருவது மிகவும் குறைந்துவிட்டது. இதனால் இப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் சீராகச் செய்ய இயலாமல் frequency அதிகமாக கொண்டே உள்ளது. மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் அவர்களால் நகராட்சியில் 29.05.2020ல் குடிநீர் விநியோகம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் சணப்பிரட்டி பகுதிக்கு வாரம் ஒருமுறை குடிநீர் வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதனடிப்படையில் தலைமை நீரேற்றும் நிலையத்தில் நீர் வெளியேற்றும் திறன் குறைந்துள்ள மின்மோட்டாருக்கு பதிலாக 25எச்.பி., மின்மோட்டார் பொருத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.35லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.35இலட்சத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/3185/2020)

தீர்மான எண்.2317 அனுமதிக்கப்பட்டது.

30)கரூர் நகராட்சி பொறியாளர் பிரிவில் GOVID 19 பணிக்கு உபயோகப்படுத்தி வந்த நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான BOLERO ஈப்பு வாகன எண்.TN88 8282க்கு கீர்பாக்ஸ் மற்றும் கிளட்சுல் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்ய அவசர அவசியத்தின் முன்னிட்டு ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று இவ்வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற M/s.Siva Auto Pvt Ltd, Karur நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறப்பட்ட விலை விவரம் உள்ளூர் சந்தை விலைவிவரத்திற்கு ஏற்ப இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று அவரது நிறுவனத்தின் மூலம் பணியினை செய்து முடிக்கவும் அதற்கான செலவினத்தொகை ரூ.73000/–யை குடிநீர் விநியோக நிதியின் மூலம் செலவிடவும் மேற்கண்ட வாகனத்தை Recovary Van மூலம் Toeing செய்ததற்கு உண்டான செலவுத் தொகை ரூ.10000/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மேற்படி வாகனத்தின் பழுது பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்களின் முன் அனுமதியுடன் M/s.Siva Auto Pvt Ltd, Karur நிறுவனத்தில் நேரடியாக பெறப்பட்ட விலைப்பட்டியலின் விலை விவரம் உள்ளூர் சந்தை விலைவிவரத்திற்கு ஏற்ப இருப்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி விலைப்பட்டியலினை ஏற்று பணியினை செய்து முடிக்கவும் அதற்கான வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கும் செலவினத்தொகை ரூ.73000 /–ஐ நகராட்சியின் குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.
3)அரசின் உச்சவரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (1250/2020/எச்5)

தீர்மான எண்.2318 அனுமதிக்கப்பட்டது.

**31)**கரூர் நகராட்சிக்குட்பட்ட கரூர் பகுதிக்கு வார்டு எண்.**15** முதல் **32** வரையுள்ள பகுதிகளுக்கு Kfw திட்டத்தின் மூலம் கூடுதல் குடிநீர் விநியோக அபிவிருத்தித் திட்டப் பணி ரூ.**2467.00**இலட்ச மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை எண்.**128** நாள்.**14.07.2010** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணையின்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர கோட்டம் கரூர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திட்டப் பணிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகளும் முடிவுற்றது என்றும் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாக நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர திட்டக் கோட்டம் கரூர் அவர்களின் கடிதம் எண். Letter No.F.Karur/WSIS/JDO/2020 நாள்.**30.06.2000**ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் பகுதியில் அனைத்து பணிகளும் முடிவுற்றாத என்று நேரடி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க இந்நகராட்சி மின்கண்காணிப்பாளர் அவர்களிடம் குறிப்பு கோரியதில் கரூர் நகரப் பகுதிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் (Kfw) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகளான 1.150HP VT மின்மோட்டாருக்கான bearing மாற்றுதல் பணி மற்றும் Panel Board ல் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்யப்பட்டுவிட்டதால் கரூர் நகர அபிவிருத்தி திட்டத்தில் நெரூர் தலைமை நீரேற்றும் நிலைய பணிகள், பிரதான நீரேற்றும் குழாய்கள் மற்றும் பாலம்மாள்புரம் நீருந்தும் நிலையம் வரையுள்ள பணிகள் மட்டும் நகராட்சி வசம் ஏற்பளிப்பு செய்து கொள்ளலாம் என்று குறிப்பு வழங்கியுள்ளார்.

ஆதலால் மேற்படி கரூர் நகர அபிவிருத்த திட்ட பணிகளின் நெரூர் தலைமை நீரேற்றும் நிலைய பணிகள், பிரதான நீரேற்றும் குழாய்கள் மற்றும் பாலம்மாள்புரம் நீருந்தும் நிலையம் வரையுள்ள பணிகளை மட்டும் நகராட்சி வசம் ஏற்பளிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

**1)**மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**2)**மேற்படி கரூர் நகர அபிவிருத்தி திட்டப் பணிகளில் நெரூர் தலைமை நீரேற்றும் நிலைய பணிகள், பிரதான நீரேற்றும் குழாய்கள் மற்றும் பாலம்மாள்புரம் நீருந்து நிலையம் வரையுள்ள பணிகளை மட்டும் நகராட்சி வசம் ஏற்பளிப்பு செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம். **(இ2/5808/2006)**

தீர்மான எண்.**2319** அனுமதிக்கப்பட்டது.

**32)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் **06.03.2020**ந் தேதி ஆய்வு கூட்டத்தில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தபட்டுள்ளதற்கிணங்க கரூர் நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **48** வார்டுகளில் உள்ள அனைத்து பகுதிகளிலும் நகராட்சி வாகனங்களின் மூலம் Sprayer கருவி பொருத்தப்பட்ட கிருமி நாசினி தெளிக்க ரூ.**20.00** லட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனோ வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்க **10%** சோடியம் ஹைப்போ குளோரைட் கொள்முதல் செய்வதற்கு தேசிய பேரிடர் காலத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணியினை மேற்கொள்ள ஏதுவாக பயன்படுத்தப்படும் அனைத்து பொருட்களும் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களில் ந.க.எண்.**3336**/ஜே**2/2020–8**, நாள்.**02.04.2020**ல் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே சப்ளை செய்யப்பட்டு வரும் PRG Construction, Karur நிறுவனத்தின் விலை விபரம் உள்ளூர் மார்க்கெட் விலை விபரத்திற்கேற்ப இருப்பதால் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் பணிக்காக Sprayer கருவி பொருத்தப்பட்ட கிருமி நாசினி தெளிக்க **10%** சோடியம் ஹைப்போ குளோரைட் கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ஏற்கனவே சப்ளை செய்யப்பட்டு வரும் PRG Construction. Karur என்ற நிறுவனத்திடம் **10%** சோடியம் ஹைப்போ குளோரைட் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத்தொகை ரூ.**2.94.520/–**யை கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(1605/2020/எச்1)**

தீர்மான எண்.2320 பதிவு செய்யப்பட்டது.

33)கொரோனா நோய் தடுப்பு எச்சரிக்கை காரணமாக தேசிய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதாலும், மக்கள் நெரிசலை தவிர்க்கும்பொருட்டு பொதுமக்கள் அறியும்வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள பிரதான சாலைகள், பேருந்து நிலையம், உழவர் சந்தை, மற்றும் அனைத்து வார்டு பகுதிகளிலுல் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் கூடும் மக்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்ற விளம்பரத்தை ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி வைத்து கொரோனா வைரஸ் தடுப்பு குறித்து பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைபிடிப்பதின் அவசியத்தை வலியுறுத்தியும் அனைத்து பகுதிகளிலும் ஆட்டோ மூலம் (01.07.2020 மற்றும் 21.07.2020) விளம்பரம் செய்யப்பட்டதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்கண்டுள்ளவாறு முன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | விவரம் | நாள் ஒன்றுக்கு/ ஆட்டோ ஒன்றுக்கு | அறிஞர் அண்ணா விளம்பர நிறுவனம் அண்டு சவுண்ட் சர்வீஸ், கரூர் | அன்னை சத்யா சவுண்ட் சர்வீஸ், கரூர் | மணி சவுண்ட் சர்வீஸ், கரூர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆட்டோவில் ஒலிபெருக்கி, மைக்செட், டீசல் உட்பட | ஒன்றுக்கு | ரூ.1,500/– | ரூ.2,000/– | ரூ.2,200/– |

எனவே கரூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 48 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் அறியும்வகையில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3336/ஜே2/2020–9 நாள்.02.04.2020ல் தெரிவித்துள்ளதின் அடிப்படையில் நேரடியாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள அறிஞர் அண்ணா விளம்பர நிறுவனம் அண்டு சவுண்ட் சர்வீஸ், கரூர் அவர்களின் விலைவிபரம் உள்ளூர் மார்க்கெட் விலைவிபரத்திற்கு ஏற்ப இருப்பதால் ஆட்டோ விளம்பரம் செய்வதற்கான செலவினத்தொகை ரூ.69,000/– யை பொதுநிதி அல்லது கொரோனா வைரஸ் தடுப்பு நிவாரண நிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (1605/2020/எச்1)

தீர்மான எண்.2321 பதிவு செய்யப்பட்டது.

34)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, மலேரியா மற்றும் இதர காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு தினசரி வழங்கப்பட்டு வந்த நிலவேம்பு குடிநீர் பவுடர் தற்போது இருப்பு குறைவாக உள்ளதால் 200கிலோ வாங்கி வழங்க கோரி சித்த மருத்துவமனை கரூர் அவர்களின் 04.07.2020ம் தேதியிட்ட கடிதத்தில் கோரியுள்ளார். எனவே, நிலவேம்பு குடிநீர் பவுடர் 200கிலோ அரசு அங்கீகாரம் பெற்ற டேம்ப்கால், சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கவும் அதற்கான செலவினத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத் தொகை ரூ.1,50,000/–யை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (2644/2007/எச்1)

தீர்மான எண்.2322      அனுமதிக்கப்பட்டது.

**35)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இனாம்கரூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மனித ஆய்வுக் குழிகளின் **10**எண்ணிக்கை ஆர்.சி.சி மூடிகள் உடைந்துள்ளது. பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி உடைந்துள்ள ஆய்வுக் குழிகளின் மூடிகளை உடன் மாற்ற வேண்டியது அவசியமாகிறது. மேலும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரளிக் கொத்து வாய்க்காலுக்கு Survey செய்து கல் ஊன்றும் பணிகளும் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**3.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**3.50** இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/3407/2020)**

தீர்மான எண்.2323      அனுமதிக்கப்பட்டது.

**36)**கரூர் நகராட்சிக்குட்பட்ட இராஜாஜி சாலை மிகவும் குறுகலாக உள்ளதினால் மிகுந்து போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் **08.06.2020** அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடத்திய ஆய்வுக்கூடத்தில் இந்த சாலையில் ஏற்படும் நெருக்கடியை குறைக்க வாங்கல் சாலை முதல் புகளூர் ரோடு வரை இணைப்பு சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதன்படி இந்த சாலையினை Total Station Method மூலம் Topography survey செய்தல், மண் பரிசோதைனை செய்தல், வரைபடங்கள் மற்றும் வடிவமைப்பு செய்து கொடுக்க தனியார் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**4.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**4.00** இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/3402/2020)**

தீர்மான எண்.2324      அனுமதிக்கப்பட்டது.

**37)**கரூர் நகராட்சி வார்டு எண்.**8** மற்றும் வார்டு எண்.**10**க்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் மற்றும் வடிகால் நீர் செல்ல வழியின்றி குளத்துப்பாளையம் ரயில்வே பாலம் அருகில் தேங்கி நின்று பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேலும் மாண்மிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது அரசு நகர் முதல் பெரிய குளத்துப்பாளையம் இரயில்வே பாலம் வரை புதிதாக வடிகால் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதன்படி மேற்கண்ட இடத்தில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**25.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.**25.00** இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/3403/2020)**

தீர்மான எண்.2325      அனுமதிக்கப்பட்டது.

**38)**கரூர் நகராட்சி வார்டு எண்.**7,8,9,10** மற்றும் **11** வார்டு பகுதிகளில் இருந்து வரும் கழிவு நீர் திட்ட சாலையின் இருபக்கமும் அமைக்கப்பட்டுள்ள பிரதான வடிகால்கள் மூலம் வெளியேறி வருகிறது. மேலும் இந்த சாலையில் அமைந்துள்ள விநாயகர் கோவில் வடபுறம் உள்ள வடிகாலினை நேராக்கி கட்டவும், சாலையின் இரு பக்கத்திலும் வடிகாலினை உயரப்படுத்தியும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொள்ளும் போது அறிவுறுத்தினார்கள் ஆதலால் மேற்கொண்ட பணிகளை மேற்கொள்ளத்

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.14.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.14.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3406/2020)

தீர்மான எண்.2326 அனுமதிக்கப்பட்டது.

39)கரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் கிழக்கு புறம் மற்றும் வடக்கு தெற்காக உள்ள கட்டிடம் மற்றும் ஆய்வகக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள 120 நபர்கள் விண்ணப்பித்து உள்ளார்கள். தற்போது கொரோனா நோய் தொற்று பரவும் காரணமாக உள்ளதால், போதிய சமூக இடைவெளியுடன் நாற்காலிகள், சாமியான பந்தல், மைக் செட் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.16,137/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.16,137/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3405/2020)

தீர்மான எண்.2327 அனுமதிக்கப்பட்டது.

40)கரூர் நகராட்சி வார்டு எண்.9 சிவலிங்க ஆசாரி தெருவில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் மழைநீர் தேங்கி வெளியேற வழியில்லாமல் பொதுசுகாதாரக் கேடு ஏற்படும் வகையில் உள்ளது. ஆதலால் மேற்கண்ட இடத்தில் புதிதாக வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகை ரூ.9.25 லட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3404/2020)

தீர்மான எண்.2328 அனுமதிக்கப்பட்டது.

41)கரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் சாலையில் உள்ள நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் அலுவலகத்தின் கிழக்குப் பகுதியில் வடக்கு தெற்காக உள்ள வகுப்பறையில் மற்றும் ஆய்வகங்கள் கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக 15வகுப்பறைகள் மற்றும் 2ஆய்வகங்கள் கட்டுவதற்கு கட்டிடத்தின் உறுதி தன்மையை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோரி முதல்வர் IRTT கல்லூரி பெருந்துரை, ஈரோடு அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி மேற்படி நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் கட்டிடத்தின் உறுதி தன்மையையும், மண் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பித்தற்கு உண்டான கட்டணம் ரூ.23,600/–யை IRTT கல்லூரி , ஈரோடு அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/1598/2020)

தீர்மான எண்.2329 அனுமதிக்கப்பட்டது.

42)Sun View Systems அவர்கள் இந்நகராட்சியில் பணிகள் மேற்கொண்டு செய்து முடித்ததில் பட்டியலில் பிடித்தம் செய்துள்ள ASD, FSD தொகையினை திரும்ப வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார். பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் இல்லாததாலும், ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதாலும் மேற்படி தொகைகள் காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி தொகை ரூ.98,000/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (பி6/3341/2020)

தீர்மான எண்.2330 அனுமதிக்கப்பட்டது.

43)கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன ROBOT MACHINE க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யவும் மண் அள்ளும் இயந்திரம் அவசர பணிக்காக தேவை என்பதால் இயந்திரத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களின் 20.06.2020 அன்று அனுமதி பெற்று JCB ROBOT MACHINE நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் அவர்களின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் SURYA BALA EARTH MOVERS SALEM நிறுவனத்தின் மூலம் நேரடியாக விலைப்புள்ளி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கு, பணி மேற்கொண்டமைக்கான பட்டியல் தொகை ரூ.95,569/— தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து நகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)பொதுசுகாதாரப் பிரிவு ROBOT MACHINE க்கு ஆயில் சர்வீஸ் மற்றும் பராமரிப்பு பழுதுகள் சரிசெய்ய ROBOT MACHINE நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் டீலர் SURYA BALA EARTH MOVERS SALEM அவர்களிடமிருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் ரூ.95,569/—யை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும், நகராட்சி பொதுநிதியில் பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொதுசுகாதார பிரிவு ROBOT MACHINE அவசர அவசியத்தை முன்னிட்டும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்ட விதி 1920 பிரிவு 15ன்கீழ் ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)அரசின் உச்ச வரம்புக்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினம் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/2558/2020)

தீர்மான எண்.2331 அனுமதிக்கப்பட்டது.

44)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் இலகுரக வாகனம் TATA ACE 22 எண்ணிக்கை கொண்ட வாகனங்கள் 10000கி.மீ., இயங்கிய நிலையில் தற்போது கொரோனா தொற்று பணிக்காகவும் தொடர்ந்த சுகாதாரப் பணிகளுக்கான இயங்கி வரும் நிலையில் மேற்காணும் வாகனங்கள் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு இதனால் சுகாதாரப் பணிகள் பாதிப்பு ஏற்படுகின்றன. எனவே, மேற்படிய சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்கவும், கொரோனா பணிகள் அவசரமாக பணிகள் கருத்தில் கொண்டு வாகனத்தின் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனைகள் மூலம் நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று வாகனத்தில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் பழுதுகள் நீக்கம் செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இதற்கான 2020—2021ம் ஆண்டிற்கா உத்தேச செலவினம் ரூ.3,50,000/—யை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான 2020—2021ம் ஆண்டிற்கான செலவினத் தொகை ரூ.3,50,000/—யை வருவாய் பொதுநிதியின் மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்5/3005/2020)

தீர்மான எண்.2332 அனுமதிக்கப்பட்டது.

45)இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் மற்றும் வெங்கடேஸ்வரா சாலையில் உள்ள கீழ்க்காணும் கடைகளின் குத்தகை உரிம காலம் 9 ஆண்டுகள் 31. 03 .2020 உடன் முடிவடைந்ததால் 01.04.2020 முதல் மேற்படி கடைகளுக்கு அரசாணை எண். 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 03.07.2007–இல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தற்போதைய அங்காடி மதிப்பு மற்றும் மறு மதிப்பீடுபடி வாடகை மறு நிர்ணயம் செய்ய சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையிலான மண்டல கண்காணிப்பு குழுவிற்கு மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி கருத்துரு தயார் செய்து அனுப்பப்பட்டது.

மேற்படி கருத்துருவின் பேரில் 08.07.2020 அன்று சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மண்டல கண்காணிப்பு குழு கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு 14 கடைகளுக்கு கண்காணிப்பு குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள வாடகை உயர்வினை இறுதி செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்கள் கடிதம் ந.க.எண்.4162/2016/அ4–1 நாள்.09.07.2020ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | கடை உரிமதாரர் பெயர் ,கடையின் விவரம் | கடை எண் | கடையின் மொத்த பரப்பளவு சதுரடி | பழைய வாடகை | மண்டல கண்காணிப்பு குழுவில் மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 082/20000432 | எ.விஜய் ஆண்டனி பு. பே.நி. தென்புறம் மாடி | பு.பே.நி. தென்புறம் மாடி | 692 | 4364 | 24912 |
| 2 | 082/20000371 | எல்.பெரியசாமி தென்புறம் பு. பே. நி. மாடி | பு.பே.நி. தென்புறம் மாடி | 2024 | 2875 | 72864 |
| 3 | 082/20000419 | எம்.பாலசுப்பிரமணி பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.19 | கடை எண்.19 | 135 | 1870 | 4500 |
| 4 | 082/20000421 | என்.இளங்கோ பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.6 | கடை எண்.6 | 221 | 1870 | 7366 |
| 5 | 082/20000422 | இ.ராஜ்குமார் பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.9 | கடை எண்.9 | 239 | 1870 | 7966 |
| 6 | 082/20000423 | பி.செழியன் பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.20 | கடை எண்.20 | 135 | 1870 | 4500 |
| 7 | 082/20000426 | என்.மணிமாறன் பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.12 | கடை எண்.12 | 158 | 1870 | 5266 |
| 8 | 082/20000427 | எம்.கருணாகரன் பு. பே.நி. வடபுறம் மாடி கடை எண்.14 | கடை எண்.14 | 221 | 1870 | 7366 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 9 | 082/20000428 | நந்தினி<br>பு. பே.நி. வடபுறம்<br>மாடி கடை எண்.11 | கடை<br>எண்.11 | 158 | 1 870 | 5266 |
| 10 | 082/20000429 | எம்..எல்.பன்னீர்<br>செல்வம்<br>பு. பே.நி. வடபுறம்<br>மாடி கடை எண்.15 | கடை<br>எண்.15 | 217 | 1739 | 7385 |
| 11 | 082/20000430 | எஸ்.பிரபாத்<br>பு. பே.நி. வடபுறம்<br>மாடி கடை எண்.7 | கடை<br>எண்.7 | 217 | 1739 | 7385 |
| 1 2 | 082/20000431 | எஸ்.பிரபாத்<br>பு. பே.நி. வடபுறம்<br>மாடி கடை எண்.8 | கடை<br>எண்.8 | 217 | 1739 | 7385 |
| 13 | 082/20000434 | ஆர்.சம்பத்<br>பழைய பேரூந்து<br>நிலைய கடை எண்.7 | கடை<br>எண்.7 | 252 | 8611 | 18470 |
| 14 | 082/20000435 | ஏ.கே.எஸ்.<br>அண்ணாதுரை<br>வெஙகடேஸ்வரா<br>சாலை கட்டிட<br>கடை.14 | கட்டிட<br>கடை.14 | 220 | 958 | 8644 |

மேற்படி மண்டல கண்காணிப்பு குழுவால் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு**

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.03.07.2007இல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி தற்போதைய அங்காடி மதிப்பு அடிப்படையில் மண்டல கண்காணிப்பு குழுவில் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

(அ6/1282/2020)

தீர்மான எண்.2333 அனுமதிக்கப்பட்டது.

46)கரூர் நகராட்சி வருவாய் பிரிவு புதிய பேருந்து நிலைய பாதை விரிவாக்கப் பணிகளுக்கான இந்நகர்மன்ற தீர்மான எண்.133 நாள்.29.12.2011யின்படி புதிய பேருந்து நிலைய வடபுறம் அமைந்துள்ள கடை எண். 32ஏ, 32பி, 32சி, 32டி, 35ஏ, 35பி, 35சி, 35டி, கடை எண் 1 முதல் கடை எண்.7 வரையிலான புதிய பேருந்து நிலைய வடபுறம் அமைந்துள்ள மட்டன் ஸ்டால் கடைகள் மற்றும் வடபுறம் அமைந்துள்ள கட்டணக் கழிப்பிடம் ஆகியவைகளை இடித்து அகற்ற மன்றம் அனுமதித்து, மேற்கண்ட கட்டிடங்கள் அகற்றப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட தீர்மானத்தினை எதிர்த்து கட்டிடம் இடிக்ககூடாது என்று இந்நகராட்சிக்கு எதிராக கடை எண் 35பியின் உரிமதாரர் திருமதி.சின்னம்மாள், கடை எண் 35சி யின் உரிமதாரர் திரு.எஸ்.சுப்ரமணியன், மற்றும் கடை எண் 35ஏ யின் உரிமதாரரின் வாரிசான திரு,கே.முருகராஜ் ஆகிய மூவரால் கரூர் மாவட்டஉரிமையியல் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 97/2012 ன் படி வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு 21.08.2012ம் தேதியில்தள்ளுபடி செய்யப்பட்டது.

இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.கே.சுப்பரமணியன் அரசு வழக்கறிஞர் (Public Prosecutor) அவர்கள் ஆஜராகியுள்ளார்கள். அதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதரகட்டணமாக ரூ16,750/— கோரியுள்ளார்கள்.Tamil Nadu State Legal Services Authority. Chennai circular Dated 17.10.2016 யின்படி மேற்படிவழக்கிற்க்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/— இதர செலவின தொகை ரூ.1750/— ஆக மொத்தம் ரூ.7750/—யை மட்டுமே வழங்க

இயலும். எனவே, மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
கரூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தின் அசல்வழக்கு எண்.97/2012க்கு திரு.கே.சுப்பரமணியன் அரசு வழக்கறிஞர் (Public Prosecutor) அவர்களை நியமனம் செய்தமைக்கும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.6000/—ம், இதர செலவின தொகை ரூ.1750/—ம் ஆக மொத்தம் ரூ.7750/—யை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
(4041/2010/அ6 (சி3))

தீர்மான எண்.2334 அனுமதிக்கப்பட்டது.

47)கரூர் நகராட்சி பொறியில் பிரிவு (நகரமைப்புபிரிவு) குளத்துபாளைம் பகுதியில் IUDM வடிகால் அமைக்கும் பணி நடைபெறுவது இனாம்கரூர் சர்வே எண்.600 A,B,E-ல் உள்ள நிலத்தின் வழியாக வடிகால் அமைக்ககூடாது என்று இந்நகராட்சிக்கு எதிராக திரு.ஏ.பேரின்பம் என்பவரால் கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.464/2019, I.A.No.778/2019படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமி B,A,LLB, அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகியுள்ளார்.

இவ்வழக்கில் 19.03.2020ம் தேதிய தீர்ப்புரையின்படி நகராட்சிக்கு எதிராக இடைக்கால உறுத்துக் கட்டளை வரப்பெற்றுள்ளது. இந்த தீர்ப்பு மேல்முறையீட்டிற்க்கு உகந்தது என்று அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்ததின் பொருட்டு கரூர் முதன்மைசார்பு நீதி மன்றத்தில் C.M.A.No 1/2020யின்படி மேல்முறையீடு நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.பி.நகுல்சாமிB,A,LLB, அவர்கள் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அசல் வழக்கிற்க்கு ஏற்படும் உத்தேசசெலவு ரூ.10,000/—க்கும், C.M.A.No 1/2020 மேல்முறையீடு தாக்கல் செய்தமைக்காக வரப்பெற்றுள்ள வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ5,000/— யையும் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)அசல் வழக்கிற்கான உத்தேச செலவு தொகை ரூ.10,000/—க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2)C.M.A.No.1/2020 மேல்முறையீடு வழக்கிற்க்கு வரப்பெற்றுள்ள செலவு தொகை ரூ.5,000/—யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (8770/2019/எப்1 (சி3)

தீர்மான எண்.2335 அனுமதிக்கப்பட்டது.

48)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 கௌரிபுரம் விஸ்தரிப்பு மற்றும் வார்டு எண்.20 சின்னாண்டாங்கோவில் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுபாலங்கள் மிகவும் சேதமடைந்து அபாயகரமாக உள்ளது. பொதுமக்கள் மற்றும் வாகனங்களில் செல்ல சிரமமாக இருப்பதால் மேற்காணும் இடங்களில் இரண்டு சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்குண்டான செலவினத் தொகையை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3265/2020)

தீர்மான எண்.2336 அனுமதிக்கப்பட்டது.

49)கரூர் நகராட்சியில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நிறைவு விழாவின் போது இந்நகராட்சியில் 2017—2018ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகளின் விவரத்தை எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலர் 2018ல் விளம்பரம் செய்ததற்கு விளம்பரம் கட்டணம் ரூ.14,700/—ம், பொதுசுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் விபரத்தை 31.08.2018ம் தேதி தஞ்சை மாலை முரசு, திருச்சி பதிப்பில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரம் கட்டணம் ரூ.13,125/—ம் கரூர் நகராட்சியில் 2011—2012 முதல் 2015—2016 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரத்தை 13.09.2016ம் தேதி தஞ்சை மாலை முரசு திருச்சி பதிப்பில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரம் கட்டணம் ரூ.12,500/—ம் ஆக மொத்தம் ரூ.40,325/—யை மாலை முரசு, திருச்சி பதிப்பு அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2)மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/3209/2020)

தீர்மான எண்.2337 அனுமதிக்கப்பட்டது.

50)கரூர் நகராட்சி பொறியியல் பிரிவு கரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அமராவதி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பழைய பாலத்தில் நடைபாதை அமைக்க இருப்பதினை தடை செய்திடக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.குணசேகரன் கரூர் அவர்களால் W.P.(MD) No.4273/2020 ன்படி முதல் பிரதிவாதியாக மாவட்ட ஆட்சித் தலைவர் கரூர் மற்றும் இரண்டாம் பிரதிவாதியாக ஆணையர் கரூர் நகராட்சி அவர்களை சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராக நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.டி.ரகு அவர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான உத்தேச செலவின தொகையினை ரூ.10,000/—யை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

இவ்வழக்கிற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,000/—யை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (சி3/1574/2020)

தீர்மான எண்.2338 அனுமதிக்கப்பட்டது.

51)கரூர் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் இலகுரக வாகனம் TATA ACE 22 எண்ணிக்கை கொண்ட வாகனங்கள் தொடர்ந்து சுகாதாரப் பணிகள் மற்றும் கொரோனா தொற்றுப் பணிக்காக இயங்கி வருவதால் மேற்காணும் வாகனங்களில் டயர்கள் தேய்மானம் அடைந்து வாகனத்தினை இயக்க முடியாதநிலை ஏற்படுகிறது. இதனால் சுகாதாரப் பணிகள் மற்றும் கொரோனா பணிகள் பாதிப்புகள் ஏற்படுகிறது. எனவே, பணிணிள் பாதிக்காமல் இருக்கவும், வாகனத்தின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு பழுதடைந்த டயர்களை உடனுக்குடன் மாற்றிக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இதற்கான 2020—2021ம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/— மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான 2020—2021ம் ஆண்டிற்கான செலவினத் தொகை ரூ.2,00,000/—யை வருவாய் பொதுநிதியின் மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்5/3004/2020)

தீர்மான எண்.2339 அனுமதிக்கப்பட்டது.

52)கரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு—1ல் அரிக்காரம்பாளையம் முதல் கோதூர் வரையுள்ள பகுதியில் புதிய தெருவிளக்கு அமைக்க இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2175/2020/இ3 நாள்.05.06.2020ன் மூலம் விண்ணப்ப கடிதம் அனுப்பியமைக்கு மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு கட்டணப் பட்டியல் நாள்.14.07.2020 தொகை ரூ.48,759/—யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இருந்த வரப்பெற்ற மதிப்பீட்டுத் தொகை ரூ.48,759/—யை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ3/2175/2020)

தீர்மான எண்.2340 அனுமதிக்கப்பட்டது.

53)கரூர் நகராட்சி வார்டு எண்.6 பெரிய குளத்துபாளையம் குகை வழிப்பாதை மற்றும் வார்டு எண்.32 பசுபதிபாளையம் குகை வழிப்பாதையில் தேங்கி வரும் மழைநீரை அகற்றும் வகையில்

Portable Genset Motor -900lpm திறன் கொண்டது வாங்கும் பணியினை ரூ.0.75இலட்சம் மதிப்பீட்டிடில உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சாலை பணியின் அத்தியாவசிய அவசியத்தினைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri Krishna Traders Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.75,000/— நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | Sri Krishna Traders, Karur | 1.39% குறைவு |
| 2 | Akhil Electricals, Karur | 4.06 % அதிகம் |
| 3 | Arasi Electricals, Karur | 8.63% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1)மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ3/3026/2020)

தீர்மான எண்.2341 பதிவு செய்யப்பட்டது.

54)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 47 சமுதாய கழிப்பிடங்கள், 10 பொதுகழிப்பிடங்கள், பேருந்து நிலைய இலவச சிறுநீர் கழிப்பிடங்கள், முக்கிய பிரமுகர்கள் வருகைகள் மற்றும் தற்போது பருவ மழைகாலம் தொடங்கி விட்டதால் பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள், கிருமி நீக்கம் செய்து கிருமி நாசினிகள் தெளித்து பின்பு லெமன் கிராஸ் ஆயில் தெளித்து பராமரிக்க வேண்டியுள்ளதால் பொதுமக்களின் பொது சுகாதார நலன் மற்றும் நகரின் சுகாதார நலன் கருதி லெமன்கிராஸ் ஆயில் 400 லிட்டர் வாங்கி வழங்க சுகாதார ஆய்வர் அவர்கள் தனது குறிப்பில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் கரூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் லெமன்கிராஸ் ஆயில் 400 லிட்டர் கொள்முதல் செய்ய உத்தேச செலவினத்தொகை ரூ.9.70லட்சம் பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி செலவினத்தொகை ரூ.9.70லட்சம் பொதுநிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். (எச்1/10239/2019)

தீர்மான எண்.2342 அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர்**
**கரூர் நகராட்சி**